Craftsmen Certificates

* 331 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the holders of the Craftsmen certificates of the Government Industrial Technical Institutes are deemed ineligible for appointment as Mechanics in Pre-Technological Courses in high schools; and

(*b*) if so, the reasons therefor?

கைவினைஞர் சான்றிதழ்கள்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுத் தொழில், தொழில் நுட்ப நிறுவனங்களால் அளிக்கப்படும் கைவினைஞர் சான்றிதழ்கள் பெற்றிருப்பவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் புகுமுக தொழில் நுட்பப் பாடமுறைகளில் இயந்திரக் கம்மியர்களாக (Mechanics) நியமிக்கப்படுவதற்குத் தகுதியற்றவர்கள் என்று கருதப்படுகிறார்களா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) உயர்நிலைப் பள்ளிகளில் இயந்திர கம்மியர்கள் நியமனம் பெற நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் அரசினர் தொழில் நுட்ப பயிலகத்தில் அளிக்கப்படும் கைத்தொழில் சான்றிதழ் சேர்க்கப்படவில்லை. அத்தகுதியை சேர்க்கும் கருத்தொரு பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய உரையில் கூறினமாதிரி, இந்தச் சிறிய பிரச்சினை வெகு காலமாக அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. அதில் அரசு சீக்கிரமாகவே முடிவு எடுத்து 'ஐ.டி.ஐ. சர்டிபிகேட், கிராப்ட்ஸ்மன் சர்டிபிகேட் ஓல்டர்ஸ்' இதற்குத் தகுதியுள்ளவர்கள் என்ற முடிவை கூடிய சிக்கிரத்தில் கூறுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதோடு சேர்க்க வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கின்றது. அப்படிச் சேர்ப்பதற்கான அளவுக்குத் தகுதி, திறமை மற்றவைகள் எல்லாம்பற்றி ஆராய வேண்டிய காரணத்தால், அது பரிசீலனையில் இருக்கின்றது. அதைப்பற்றி ஆராய்ந்து முடிவு காண முயற்சி எடுக்கலாம்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இதற்கு முன்னால் பொதுத் தகுதி 'பர்ஸ்ட் பார்ம்' என்றும், 5 ஆண்டுகள் அவர்களுக்கு 'ஒர்க்ஷாப் எக்ஸ்பீரியன்ஸ்' இருந்தால் போதும் என்றும்தான் இருக்கின்றது. இப்போது எஸ்.எஸ்.எல்.சி. வரையிலும் படித்துவிட்டு இரண்டு ஆண்டுகள் ஐ.டி.ஐ.-ல் படித்துவிட்டு அவர்கள் அங்கு கொடுக்கக்கூடிய கிராப்ட்ஸ்மன் சர்டிபிகேட் பெறுகிறார்கள். நாம் விதித்திருக்கும் விதி அந்த விதியைவிட எந்தவிதத்திலும் குறைவானதல்ல என்பதை அரசு மனதில் கொண்டு சீக்கிரம் முடிவு எடுத்தால், ஐ.டி.ஐ. படித்து வெளியேறும் பல மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு இடமிருக்கும் என்பதை அரசு ஏற்றுக்கொள்ளுகின்றதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, விரைவிலே முடிவு காண்பதற்கான முயற்சி எடுக்கப்படும்.

Engineering Instructors in High Schools

* 332 Q.—Thiru M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any special pay was paid to Engineering Instructors in High Schools up to 2nd October 1970;

(b) whether it is being continued thereafter ;

(c) if not, the reasons therefor ;

(d) whether it was taken into account while refixing their salaries after 2nd October 1970; and

(e) if not, the reasons therefor ?

உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள பொறியியல் ஆசிரியர்கள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள பொறியியல் ஆசிரியர்களுக்கு 2—10—1970 வரையில் சிறப்புச் சம்பளம் ஏதேனும் வழங்கப்பட்டதா?

(இ) அந்த சிறப்புச் சம்பளம் 2—10—1970-க்குப் பின்னரும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறதா ?